**செய்தி வெளியீடு– 26** **13.1.2009**

## பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு 103 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பொங்கல் திருநாளையொட்டி கழக அரசினால் செயலாக்க ஊக்கத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படும் இந்த ஆண்டின் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறுவோர், நேரடி நெல் கொள்முதல் நிலையப் பணியாளர்கள், சுமை தூக்குவோர், தற்செயல் பணியாளர்கள் ஆகிய நிலைகளில் பணிபுரியும் 29 ஆயிரத்து 566 பணியாளர்களுக்கு 2007–2008 ஆம் ஆண்டிற்கான செயலாக்க ஊக்கத் தொகையாக தலா 350 ரூபாய் வீதம் மொத்தம் ஒரு கோடியே 3 இலட்சத்து 48 ஆயிரத்து 100 ரூபாய் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

..........................................................................

ISSUED BY – DIPR ,CHENNAI-09